# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஆடி 26 சனிக்கிழமை (10-08-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 175


கைதாகலாம் என்ற அச்சத்தால்

## முன்பிணை அனுமதி கோரி ஜெயலலிதா நேற்று மனு

சென்னை, ஒக. 10

தாம் எந்நேரமும் கைது செய்யப்படலாம் என்ற அச்சம் காரணமாக தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேற்று முன்பிணை அனுமதி கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

செல்வி ஜெயலலிதா மீதும் மற்றும் மூவர் மீதும் லஞ்ச ஒழிப்புச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பது தெரிந்ததே.

இந்த வழக்கில் முன்னாள் முதலமைச்சர், செல்வகணபதி, மூத்த ஐ ஏ. எஸ். அதிகாரி எஸ்.எம். பாண்டே, ஹோட்டல் நிர்வாக இயக்குனர் ராக்கேஷ் மிட்டல் ஆகியோர் ஏனைய சந்தேக நபர்கள்.

கொடைக்கானலில் தனியார் ஹோட்டல் ஒன்றைக் கட்டுவதற்கு ஒழுங்குமுறைகளை மீறி முறைகேடாக நடந்து விதிகளைத் தளர்த்தியதாக இந்த நால்வர் மீதும் குற்றஞ்சாட்டப்பட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

ஜப்பானுக்கு இல்மனைட் ஏற்றிக் கொண்டிருந்த

## பிலிப்பீன்ஸ் கப்பலின் மீது புல்மோட்டையில் தாக்கு!

கொழும்பு, ஒக. 10

திருகோணமலை புல்மோட்டைப் பிரதேசத்தில் அமைந்துள்ள சிறிய துறைமுகம் ஒன்றில் இல்மனைட் கனிப்பொருள் ஏற்றிக்கொண்டிருந்த வெளிநாட்டுச் சரக்குக் கப்பல் ஒன்றைத் தகர்க்கும் வகையிலான தாக்குதல் முயற்சி ஒன்று நேற்றுக் காலை இடம்பெற்றிருக்கின்றது.

கடற்புலிகளே இத்தாக்குதலை நடத்தியதாக ஸ்ரீலங்கா அரசுத் தரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

''பிரின்ஸ் ஒவ் வேவ்'' என்ற பிலிப்பீன்ஸ் நாட்டுக் கப்பல் ஜப்பானுக்கு இல்மனைட்டை எடுத்துச் செல்வதற்காக அதனை ஏற்றிக் கொண்டிருந்த சமயம் தாக்குதலுக்கு இலக்காகியிருக்கின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச சமூகத்தின் தலையீட்டை கோருகின்றனர் விடுதலைப் புலிகள்

## கிளிநொச்சி விவகாரம் குறித்து

கொழும்பு, ஒகஸ்ட். 10

கிளிநொச்சியில் இடம்பெற்றுவரும் யுத்தத்தினால் பல லட்சம் தமிழ் மக்கள் பாதிப்புற்றிருக்கும் இச் சூழ்நிலையில்—

மக்களைப் பாதிக்கும் போரை நிறுத்தி, மக்களுக்கான நிவாரணப் பணிகளை வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்கள் சுயாதீனமாக மேற்கொள்ள வழிவகுக்கும் விதத்தில் இவ்விடயத்தில் சர்வதேச சமூகம் தலையிட வேண்டும்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் லண்டன் தலைமையகம் விடுத்துள்ள கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

கிளிநொச்சியில் தற்போது நடைபெறுவது ஆக்கிரமிப்புப் போர் என வர்ணித்துள்ள விடுதலைப் புலிகள், இப்போரினால் பல லட்சம் தமிழ் மக்கள் மிக மோசமாகப் பாதிப்படைந்திருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

எனவே இப்போரை நிறுத்தவும் —

சர்வதேச தொண்டு நிறுவ

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பலவீன நிலையில் விடுத்த கோரிக்கை அல்ல இது!

### புலிகள் பிரமுகர் கூறுகின்றார்

லண்டன், ஒக. 10

கிளிநொச்சி விவகாரத்தில் சர்வதேச சமூகத்தின் தலையீட்டைக் கோரி விடுதலைப் புலிகள் விடுத்துள்ள வேண்டுகோள், யுத்தத்தில் புலிகள் பலவீனமுற்றிருப்பதால் விடுக்கப்பட்ட ஒரு கோரிக்கை என்று கூறுவது முற்றிலும் தவறானதாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பேசவல்ல அதிகாரியும் மத்தியகுழு உறுப்பினருமான திரு. லோறன்ஸ் திலகர் பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

அப்பேட்டியில் அவர் குறிப்பிட்ட சில விடயங்கள் வருமாறு;-

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கரடிப்போக்குப் பகுதியில் படையினர் பாதுகாப்பை பலப்படுத்துகின்றனராம்

கொழும்பு, ஒக. 10

ஆனையிறவிலிருந்து ''உண்மை வெற்றி'' இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்து கிளிநொச்சிக்கு வடக்கே சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள கரடிப்போக்குச் சந்திவரை முன்னேறியிருக்கும் ஸ்ரீலங்கா அரசுத் துருப்புக்கள் அங்கு தமது நிலைகளை ஸ்திரப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் இவ்வாறு அறிவித்திருக்கின்றது.

பாதுகாப்புப் படைகளின் நிலைகள் மீது விடுதலைப் புலிகள் தொடர்ந்து மோட்டார் தாக்குதல்களை நடத்தி வருவதாகவும் அது தெரிவித்தது.

படையினர் இத்தாக்குதல்களைத் தமது பீரங்கித் தாக்குதல்கள் மூலம் முறியடித்துள்ளனர் என்றும் —

(6 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவுகடற்பகுதியில் கடற் படையினர் தாக்குதல்

கொழும்பு, ஒக. 10

முல்லைத்தீவுக் கடற்பிரதேசத்தில் கடற்புலிகள் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் தாக்குதல் ஒன்றை நடத்தியிருப்பதாக இலங்கை வானொலி நேற்று அறிவித்தது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இத்தாக்குதலில் 30 கடற் புலிகள் உயிரிழந்ததாகவும் —

புலிகளின் மிகப்பெரிய வள்ளம் ஒன்று முற்றாகச் சேதமடைய மற்றும் மூன்று வள்ளங்களுக்கும் பலத்த சேதம் ஏற்படுத்தப்பட்டதாகவும் —

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

இத்தாக்குதலில் கடற்படை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ரோந்து சென்ற படையினர் மீது திருமலையில் புலிகள் தாக்குதல்

### ஓர் அதிகாரி உட்பட எண்மர் பலி

திருகோணமலை கல்லாறு முகாமில் இருந்து ரோந்துக்காக அனுப்பப்பட்ட இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் நேற்றுப் பிற்பகல் 12.30 மணியளவில் கல்லாறில் இருந்து 2 கிலோ மீற்றர் தூரத்தில் மாவல்தீவு என்ற இடத்தில் வைத்துத் தாக்கியதாக பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் நேற்றிரவு அறிவித்தது.

இந்தத் தாக்குதலில் ஓர் அதிகாரியும், 7 படையினரும் உயிரிழந்ததாகவும், 6 படையினர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர்கள் திருகோணமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

மேலதிக படைகள் அங்கு அனுப்பப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டதாகவும் —

12 புலிகள் கொல்லப்பட்டதாகவும் —

அரசுத் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## 6 தமிழ்க் கட்சிகளுடன் பீரிஸ் நேற்று சந்திப்பு

கொழும்பு, ஒக. 10

அரசாங்கத்தின் அதிகாரப் பரவலாக்கல் குறித்து நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி எல். பீரிஸ் தமிழ்க் கட்சிகளுடன் நேற்றுக் காலை பேச்சு நடத்தினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, ஈ. பி. ஆர். எல். எவ், ஈரோஸ், புளோட் ஈ. பி. டி. பி ஆகியவற்றின் தலைவர்கள் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டனர்.

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண அரசாங்கம் எடுத்துவரும் முயற்சிகளை இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகள் வரவேற்றனர்.

அரசாங்கத்தின் மீது தமக்கு பூரண நம்பிக்கை இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் மற்றும் நகல் வரைபு ஆகியவை தொடர்பாக எழும் கருத்து வேறு

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை. போன்று 10 தாக்குதல்கள் நடந்தாலும் வெற்றி அரசுக்கே!

## அனுருத்த ரத்வத்த கூறுகிறார்

கொழும்பு, ஓக. 10

''முல்லைத்தீவில் இடம் பெற்றது போல் பத்துத் தாக்குதல் நடந்தாலும் சமாதானக் குறிக்கோளில் அரசு வெற்றியீட்டும்.''

பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த மேற்கண்டவாறு நாடாளுமன்றத்தில்தெரிவித்தார்.

அவசரகால நீடிப்பு பிரேரணை விவாதத்தில் பேசுகையில் அவர் இதனைத்தெரிவித்தார்.

ஐ. தே. க. பதவியில் இருந்த போது பூநகரி தாக்குதல் நடைபெற்றது. அப்போது எதிர்க்கட்சித் தலைவியாக இருந்த ஸ்ரீமாவோ பண்டார நாயக்க அது குறித்து விளக்கம் கேட்டார். சபையில் விவாதம் நடத்துமாறு வேண்டுகோள் விடுத்தார்.

அப்போது பிரதமராக இருந்த ரணில்விக்கிரமசிங்க அன்றைய சூழ்நிலையில் விவாதத்துக்கு அனுமதி தரமுடியாதுஎன்றுகூறியதோடு வெறுமனே 15 நிமிடம் உரையாற்றிவிட்டு பூநகரி தாக்குதல்பற்றி எதுவும் கூறாமல் போய்விட்டார்.

இப்படி பிரதி பாதுகாப்பு அமைச்சர் மேலும் கூறினார்.

(இ-3)

# கொலன்னாவை எண்ணெய் குதத்தில் கோடிக்கணக்கான ரூபா மோசடி

கொழும்பு, ஓக. 10

கொலன்னாவை பெற்றோலியக் குதத்தில் கடந்த மே, ஜூன் மாதங்களில் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியுடைய பெற்றோலியப் பொருள்கள் மோசடி செய்யப்பட்டதாக ''லங்காதீப'' சிங்கள நாளிதழ் தெரிவிக்கிறது.

பெற்றோலியக் கூட்டுத்தாபன திடீர் பரிசோதனைப் பிரிவு மேற்கொண்ட பரிசோதனையின்போது கடந்த மே, ஜூன் மாதங்களில் மட்டும் 2 லட்சத்து 31 ஆயிரத்து 176 லீற்றர் சுப்பர் பெற்றோலும் 12 ஆயிரத்து 569 லீற்றர் லங்கா பெற்றோலும் களவாடப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது எனவும் இவற்றின் பெறுமதி கோடிக் கணக்கில் அமையும் எனவும் ''லங்காதீப'' தெரிவிக்கிறது.

(இ-10)

# 31-ம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்: 02 – 12 – 1966

விண்ணில்: 11 – 07 – 1996

திருமதி

## சிற்ரேஸ்வரி ஜெயக்குமார்

(யாழ். போதனா வைத்தியசாலைச் சிற்றாழியை)

மாலையிட்டுக் கைப்பிடித்து உனை
மனையாளாய் ஏற்ற முதல்
உள்ளத்தால் உடலால் என்றும்
ஒன்றுபட்டு வாழ்ந்தாய் ...
இன்று எனை விட்டு மழலையுடன்
எங்கோ சென்றாய்!
நாட்கள் சில உருண்டோடி
மாதமொன்று வந்தாலும்
என் இதயச் சுவர்களில்
என்றும் உறைந்திருப்பாய்
உன் ஆத்ம சாந்திக்கு
இறைவனை வேண்டுகிறேன்.

தகவல்:
சு. ஜெயக்குமார்
(கணவன்)

82/16, 3ஆம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(42160)

# செல்வச் சந்நிதி உற்சவம்: பி.ப. 5 மணியுடன் முடியும்

வடமராட்சி, ஓக 10

வரலாற்றுப் பெருமை மிக்க தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த உற்சவ காலங்களில்திருவிழா தினமும் மாலை 5 மணியுடன் முடிவடையும்.

இக்கோவில் உற்சவம் தொடர்பான ஒழுங்குகளை மேற்கொள்வது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. ஆ. சிவசுவாமி தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

வருடாந்த உற்சவத்தையொட்டி பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவும், வல்வெட்டித்துறை நகரசபையும் இணைந்து சுகாதார சேவைகளைக் கவனிப்பதென்றும், பக்தர்களின் வசதி கருதி இ. போ. ச. மினி பஸ் சேவைகளை நடத்துவதெனவும், உற்சவங்களைத் தினமும் மாலை 5 மணியுடன் நிறைவு செய்வதெனவும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இம்மாதம் 14 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் செல்வச்சந்நிதி ஆலய உற்சவம் ஆரம்பமாகிறது.

26 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 27 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 28 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும். (அ-173)

# ஆண்டு – 5 புலமைப் பரிசில் '96

எம்மால் ஒவ்வொரு ஞாயிறும் மாதிரிப் பரீட்சைகள் மாணவர் நலன் கருதி 6 பிரிவுகளாக நடத்தப்படுகின்றன.

★ 4 - 8 - 96 ஞாயிறு நடைபெற்ற 11ஆவது மாதிரிப் பரீட்சையில் தோற்றிய 212 மாணவர்களில் உயர்ந்த மொத்தப் புள்ளிகளைப் பெற்றவர்கள்.

1. செல்வன் ச. நடராஜசர்மா 179 புள்ளிகள்
2. செல்வி இ. வித்தியா 169 புள்ளிகள்
3. செல்வி சோ. லக்ஷிகா 165 புள்ளிகள்
4. செல்வி அ. டயானர்த்தி 164 புள்ளிகள்
5. செல்வி பா. உமாசாந்தி 163 புள்ளிகள்
6. செல்வி ப. சுகன்யா 161 புள்ளிகள்

இவர்களுக்கு எமது பாராட்டுதல்கள்

★ 12ஆவது மாதிரிப் பரீட்சை வழமைபோல் 11 - 08 - 96 ஞாயிறு நடைபெறும்.

★ இப்பரீட்சைகளை நடத்த விரும்பும் பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பரீட்சைப்பகுதி – **BOND INSTITUTES**
58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[42199]

## ஜூலை மாத ஒய்வூதிய வவுச்சர்கள்

யாழ்ப்பாணம், ஓக. 10

யாழ். மாவட்ட ஓய்வூதியகளின் ஜூலை மாத வவுச்சர்கள் இன்று தபால் நிலையங்கள் மூலம் விநியோகிக்கப் படவிருப்பதாக யாழ். பிரதம தபாலதிபர் திரு சு. கோடீஸ்வரன் தெரிவித்தார்.

தீவுப்பகுதி, தெல்லிப்பழை, காங்கேசன்துறை, அளவெட்டி பகுதிகளின் ஓய்வூதியர்களின் வவுச்சர்கள் யாழ். பிரதம தபாலகத்தில் வைத்து இன்று முதல் விநியோகிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

(இ-3)

## யுத்தமா அல்லது அரசியல் தீர்வா?

கொழும்பு, ஓக. 10

யுத்தமா அல்லது அரசியல் தீர்வா என்பதை முடிவு கட்ட வேண்டிய கட்டத்துக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது.

இப்படிக் கூறினார் ஐ. தே. க. எம்பி றொனி டி மெல்

அவசரகால நீடிப்பு பிரேரணை மீது பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

தொடரும் யுத்தத்தால் சிங்களவர் மாத்திரம் அல்ல தமிழர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எவ்வளவு காலத்துக்குத் தான் இச்சண்டையை முன்னெடுத்துச் செல்லப்போகிறீர்கள்? என்று அவர் கேட்டார்.

(இ-3)

# உ
# பூப்புனித நன் நீராட்டு விழா அழைப்பு



அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான தாது வருடம் ஆடி மாதம்
27 ஆம் நாள் (11-08-1996) ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் 11- 00 மணிவரை வரும்
சுப வேளையில்

எமது கனிஷ்ட புத்திரி திருநிறைசெல்வி
★ **ஹேமமாலினி** அவர்களுக்கு ★

பூப்புனித மங்கள நீராட்டுவிழா நடத்த நிச்சயித்திருப்பதால்
அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து
சிறப்பித்து செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்.

முக்கிய குறிப்பு:-
சூழ்நிலை காரணமாக தனிப்பட்ட அழைப்பு அனுப்ப முடியாமைக்கு வருந்துகின்றோம். எனவே இதனை அழைப்பாக ஏற்று உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

★ இங்ஙனம் தங்கள் நல்வரவை விரும்பும் ★

திரு. அரியரட்ணமும் (அரியம்)
(வெற்றிலை வியாபாரம்)
துணைவியாரும்

சற்குழி,
சாவகச்சேரி.

(42223)



## மோட்டார் சைக்கிள் மோதி காயம்

யாழ்ப்பாணம், ஓக. 10

திருநெல்வேலிச் சந்திக்கருகாமையில் நேற்று நண்பகல் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

வீதியில் சென்று கொண்டிருந்தவரான இராசா குலசிங்கம் (வயது53) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் சுய நினைவிழந்து, ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவரது அடையாள அட்டையில் கொழும்பு விலாசமே காணப்படுகிறது.

(இ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ. தி. மு. கழக உறுப்பினர்கள் சட்ட சபையிலிருந்து வெளிநடப்பு

## ஜெயலலிதா மீதான வழக்குகளுக்குக் கண்டனம்

கொடைக்கானலில் தனியார் ஹோட்டல் ஒன்றுக்கு விதிகளுக்குப் புறம்பாக அனுமதி அளித்த வழக்கில் முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவை முதலாவது சந்தேக நபராக பொலீஸார் பதிவு செய்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து அ. தி. மு. க. உறுப்பினர் திரு திருநாவுக்கரசு தலைமையில் அ. தி. மு. க. உறுப்பினர்கள் நேற்று முன்தினம் சட்டப் பேரவையில் இருந்து வெளிநடப்புச் செய்தார்கள்.

பேரவையில கேள்வி நேரம் முடிந்ததும் திரு. திருநாவுக்கரசு எழுந்து, இந்த வழக்கில் இருந்து செல்வி ஜெயலலிதாவின் பெயரை நீக்குவதற்கு முதலமைச்சர் பொலீஸாருக்கு உத்தரவிடவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

இதற்கு முதலமைச்சர் மு. கருணாநிதி அவையில் பதில் அளிக்காததையடுத்து, இது அரசின் பழிவாங்கும் போக்கையும், உள்நோக்கம் கொண்ட செயலையும் தெரிவிப்பதாகக்கூறி திருநாவுக்கரசு தலைமையில் அக்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

பின்னர் செய்தியாளரிடம் பேசிய மு. கருணாநிதி, ஜெயலலிதா இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டதற்கான காரணம் திருநாவுக்கரசுக்கு தெரியும் என்பதால், அவையில் தாம் பதில் அளிக்கவில்லை என்று கூறினார்.

### ஹவாலா மோசடி சந்தேக நபர்

# இந்தியாவிடம் ஒப்படைக்க ஹொங்கொங் மறுப்பு

ஹவாலா மோசடி வழக்கில் முக்கிய குற்றவாளியாகக் கருதப்படும் அமிர்பாயை இந்திய மத்திய புலனாய்வுத்துறையினரிடம் ஒப்படைக்க ஹொங் கொங் நீதிமன்றம் மறுத்துவிட்டது.

மத்திய புலனாய்வுப் பிரிவு சர்வதேச பொலீஸ் பிரிவுக்கு விடுத்த வேண்டுகோளை அடுத்து அமிர்பாய் ஹொங்கொங்கில் கடந்த ஜூன் மாதம் கைது செய்யப்பட்டார்.

ஹவாலா வழக்கு விசாரணை தொடர்பாக அவரை தங்களிடம் ஒப்படைக்குமாறு இந்திய மத்திய புலனாய்வுத் துறையினர் ஹொங்கொங் நகர நிர்வாகத்தினரைக் கேட்டிருந்தனர்.

இந்த வேண்டுகோளை அந்நகர மஜிஸ்ரேட் நீதிமன்றம் ஒன்று ஏற்றுக் கொள்ளாமல் அவரை உள்ளூர் குடியேற்றப் பிரிவு அதிகாரியிடம் ஒப்படைத்துவிட்டதாக புதுடில்லி புலனாய்வுப் பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-5)

# பொலீஸ் நிலையத்திற்கு சென்றார் சுவர்ண புத்திரி

ஜகார்த்தா ஒக. 10

இந்தோனேஷிய எதிர்க்கட்சித் தலைவி திருமதி மேகவதி சுவர்ணபுத்திரி நேற்று தலைநகர் ஜகார்த்தாவில் உள்ள மத்திய பொலீஸ் தலைமையகத்துக்குச் சென்றார்.

அண்மையில் ஜகார்த்தாவில் நடைபெற்ற கலவரம் ஒன்று தொடர்பாக இவருக்கு இரு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டிருந்தன.

முதலாவது அழைப்பாணையை இவர் ஏற்க மறுத்ததை அடுத்தே இண்டாவது அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்தது. (இ)

### நாட்டை ஆள

# எக்கட்சிக்கும் மக்கள் முழு அதிகாரம் அளிக்கவில்லை

## பிரதமர் கூறுகிறார்

புதுடில்லி, ஒக. 10

நாட்டை ஆள்வதற்கு எந்தவொரு கட்சிக்கும் மக்கள் முழு அதிகாரம் அளிக்கவில்லை. நாடு ஒற்றுமையாக இருக்க வேண்டும். பாசிச சக்திகளின் கரங்களில் நாடு விழுந்துவிடக் கூடாது என்பதற்கு ஆதரவாக எழுபது சதவீத மக்கள் வாக்களித்திருக்கிறார்கள்.

இவ்வாறு பிரதமர் தேவ கௌடா கூறினார்.

புவனேஸ்வரில் நாளிதழ் ஒன்றின் பொன்விழாவில் நேற்று முன் தினம் அவர் கலந்து கொண்டு பேசும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

எப்பாடுபட்டாவது மதச் சார்பின்மை பாதுகாக்கப்பட வேண்டும். அழிப்பது எளிது – ஆக்குவது மிகவும் கடினம் என்பதால் நாட்டுச் சீரமைப்பு பணி மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும் என்றும் — அவர் கூறினார். [இ-5]

## உலக அரங்கில்

### ஜெயலலிதா எந்நேரமும் கைதாகலாம்

தமிழகத்தின் முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா எந்த நேரத்திலும் கைது செய்யப்படலாம் என சிங்கப்பூர் வானொலி தெரிவித்தது.

கொடைக்கானல் விடமைப்புத் திட்டம் சம்பந்தமாக இடம்பெறும் விசாரணையின் படி இவர் எந்த நேரத்திலும் கைது செய்யப்படலாம் என தமிழகப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருப்பதாக அவ் வானொலி மேலும் தெரிவித்தது. (இ-5)

### அணு ஆயுத தடை ஒப்பந்தம்:

# இந்தியாவின் ஆதரவை அமெரிக்கா கோருகிறது

புதுடில்லி ஒக. 10

விரிவான அணு ஆயுத தடை ஒப்பந்தத்தை தடுக்க வேண்டாம் என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் வோரன் கிறிஸ்தோபர் இந்தியாவை வற்புறுத்திக் கேட்டுக் கொண்டிருக்கின்றார்.

இந்த ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடமுடியா விட்டால், குறைந்த பட்சம் இந்த ஒப்பந்தத்தை நிராகரிக்காமல் இருக்கலாம் என்று அவர் இந்தியத் தூதுவரிடம் தெரிவித்ததாக வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விரிவான அணுவாயுத தடை ஒப்பந்தத்துக்கான இப்போதைய பேச்சுக்கள் குறித்து அமெரிக்க வெளியுறவு அமைச்சுக்கும் அமெரிக்காவுக்கான இந்தியத் தூதர் நரேஷ் சந்திராவும் வாஷிங்டனில் சந்தித்துப் பேசினார்கள்.

வெளியுறவு அமைச்சர் ஐ. கே. குஜராலுக்கான கடிதம் ஒன்றை கிறிஸ்தோபர் இந்தியத் தூதரிடம் கையளித்தார். (இ-5)

### பாக். ஆதரவு

ஆப்கானிஸ்தானில் உள்ள தலிபான் இயக்கத்துக்கு பாகிஸ்தானிடமிருந்து ஆதரவு கிடைப்பதாக அமெரிக்கா கூறியிருக்கிறது.

ஆப்கானிஸ்தானில் வலுவான மத்திய அரசு ஒன்று இல்லாததினால் பயங்கரவாதிகளுக்கு பாதுகாப்பு அளிப்பதும், பயிற்சி அளிப்பதும் இலகுவாக இருப்பதாக வாஷிங்டனில் ஒரு தொலைக்காட்சிப் பேட்டியில் அமெரிக்க வெளியுறவு இணை அமைச்சர் திருமதி ராபின்ரபீல் கூறியிருக்கிறார். (இ-4)

# நரசிம்மராவுக்கும் வாஜ்பாய்க்கும் அமைச்சருக்குரிய சலுகைகள்

## தேவகௌடா அறிவிப்பு

புதுடில்லி, ஒக. 10

முன்னாள் பிரதமர்கள் பி. வி. நரசிம்ம ராவுக்கும், அடல் பிகாரி வாஜ்பாய்க்கும் கபினற் அமைச்சர் அந்தஸ்துக்குரிய சலுகைகளை ஐக்கிய முன்னணி அரசு வழங்கியிருக்கிறது.

கடந்த மாதம் நடந்த மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

நரசிம்மராவுக்கும் வாஜ்பாய்க்கும் நிர்வாகப்பணிகளில் உதவுவதற்காக ஐ. ஏ. எஸ் அதிகாரி ஒருவர் தனிச் செயலர் ஆகவும், வேறு எட்டுப்பேர் ஊழியர்களாகவும் பணியாற்றுவார்கள்.

மக்களவையின் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் வாஜ்பாய் கபினற் அமைச்சருக்குரிய சலுகைகளை ஏற்கனவே பெற்றிருக்கின்றார்.

முன்னாள் பிரதமர்கள் வி. பி. சிங், சந்திரசேகர், குஜாரிலால் நந்தா ஆகியோருக்கும் அவர்களது வாழ்நாள் முழுவதற்குமான நிர்வாகப் பணிகளில் உதவிடுவதற்காக இரண்டு ஊழியர்கள் அமர்த்தப்பட்டுள்ளர்.

# இரு முன்னாள் சிப்பாய்கள் வெள்ளவத்தையில் கைது

## தமிழர்வீட்டில் கொள்ளையிட முயற்சி

கொழும்பு ஒக. 10

இரகசியப் பொலீஸார் என்று தம்மைக் கூறிக் கொண்டு கொழும்பில் தமிழர்களின் வீடுகளுக்குள் புகுந்து கொள்ளையிட்டு வந்த இரு முன்னாள் இராணுவ வீரர்கள் வெள்ளவத்தைப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

வெள்ளவத்தை பொக்வேல் வீதியில் இராசையா செல்வலிங்கம் என்பவரது வீட்டில் கொள்ளையிட முயன்ற போதே இவர்கள் கைதாகினர்.

இவர்களிடமிருந்து கைத்துப்பாக்கி ஒன்றும், கைக்குண்டுகளும் கைப்பற்றப்பட்டன.

வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, தெஹிவளை போன்ற பகுதிகளில் முப்பதுக்கும் மேற்பட்ட கொள்ளைச் சம்பவங்களில் இந் நபர்கள் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று பொலீஸார் தெரிவிக்கின்றனர். (இ - 5)

# ஆயுதப் படையினருக்கு ஆள்பலம் போதாது

## றொனி கூறுகிறார்

பொலீஸாரும், இராணுவத்தினரும் ஆள்பலம் அற்றவர்களாகக் காணப்படுகின்றனர்.'' இவ்வாறு ஐ. தே. க எம். பியான றொனி டிமெல் கூறினார்.

அவசரகால நீடிப்பு விவாதத்தில் நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் அவர் இப்படி கூறினார்.

முல்லைத்தீவு யுத்தம் இப்போது முடிவடைந்து விட்டதால், உயிரிழப்புக் குறித்த விவரங்களை அரசு வெளியிட வேண்டும் என்றும் அவர் கோரினார்.

# ராணுவ நடவடிக்கைகளை இணைக்க கூட்டு ராணுவ தலைமை அலுவலகம்

## அரசுக்கு ரணில் ஆலோசனை

கொழும்பு, ஒக 10

''விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை ஒன்றிணைப்பதற்கு, கூட்டு இராணுவ தலைமை அலுவலகம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும்''.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய போது மேற்கண்டவாறு அரசுக்கு ஆலோசனை கூறினார்.

இதன் மூலம் பாதுகாப்புப் படையினர் நெருக்கடி நிலைகளின் போது வெற்றிகரமாகச் செயற்பட முடியும் என்றும் அவர் கூறினார்.

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான விவாதத்தில் கலந்து கொண்டு அவர் உரை நிகழ்த்தினார்.

முல்லைத்தீவுச் சம்பவம் பற்றி குறிப்பிட்ட அவர், அரசாங்கம் அதன் இராணுவ உத்திகளை மாற்றியமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

விடுதலைப் புலிகளின் போராட்டத்தை ஊக்குவிக்கும் வகையிலான எந்த வித நடவடிக்கையிலும் ஐ தே. க. ஈடுபடவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

### சிலீப்பர் கட்டைகளுக்கு தீ வைப்பு

கொழும்பு, ஒக 10

மட்டக்களப்பு - வாழைச்சேனை ரயில் பாதையில் 30 சிலீப்பர் கட்டைகள் கடந்த புதன்கிழமை தீயிட்டு நாசமாக்கப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இதன் காரணமாக மட்டக்களப்பு – கல்லோயா ரயில் சேவை பாதிக்கப்பட்டுள்ளது. (இ-3)

### மல கூடம் அமைக்க நிதி

யாழ்ப்பாணம் ஒக 10

யாழ். மாநகரசபைப் பகுதியில் மலகூடம் அமைப்பதற்கான நிதி உதவி, மாகாண சுகாதாரப் பணிப்பாளரின் ஏற்பாட்டில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக மாநகரசபை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

முழுமையான மலகூடம் ஒன்றுக்கு ஆயிரத்து 500 ரூபாவும் –

மேலமைப்பு இல்லாத மலகூடம் ஒன்றுக்கு ஆயிரம்ரூபாவும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### காயம்

யாழ்ப்பாணம், ஒக. 9

பாரிய மரமொன்றைத் தறித்தவர் அந்த மரத்தினுள் அகப்பட்டு நெரியுண்டு படுகாயமடைந்தார்.

நல்லூர் நாயன்மார் கட்டுப் பகுதியில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி கந்தசாமி (வயது 53) என்பவரே காயமடைந்தவராவார். (இ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

செல்வநாயகம் ஆனந்தி (பாண்டிருப்பு, மட்டக்களப்பு) ஆகிய எனது 686280144 V என்ற இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை 7-8-96 அன்று நாவலர் வீதியில் (கனகரட்ணம் ம. ம. வி) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். யெ. ஆனந்தி, 22/2, வைரவர் கோவில் வீதி, அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம். [42181]

### இடமாற்றம்

மானிப்பாயில் இயங்கிய Dr. பாலபாஸ்கரனின் வைத்தியசாலையும், எனது வைத்தியசாலையும் மாலையில் மட்டும் ஆனைக்கோட்டைச் சந்திக்கு அருகாமையில், இயங்குகின்றது. Dr. K. சிவனடியான். (42158)

### வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்மா, வாதநோய்கள், மாதவிடாய்குத்து, வலிப்பு, சரும நோய்கள், மூல மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். [42111]

### பயிற்சிப் பரீட்சைகள்

இரண்டாம் தவணை மாதிரிப் பரீட்சைகள் வெகுவிரைவில், சாவகச்சேரி யுப்பிட்டர் கல்வி நிலையத்தில் சகல பாடங்களும் நடைபெறும். வெளிமாணவர்களும் பங்குபற்றலாம். முன்கூட்டியே பெயர்களைப் பதிவு செய்யவும். (சி-2718)

### வணிகபுள்ளிவிவரவியல்

A/L 97/ 98 வணிகப் புள்ளி விவரவியல் உட்பட வர்த்தக பாடங்களும், ஆண்டு ஆறு முதல் G. C. E. (O/L) கணிதமும், பட்டதாரி ஆசிரியரால், தனியாகவும், குழுக்களாகவும், கற்பிக்கப்படுகின்றன. தொடர்பு: S. Naren (B Sc), 32, TemPle Road, Jaffna (Hospital Road அருகாமையில்). (42157)

### மணமகன் தேவை

லக்கினத்தில் செவ்வாயுள்ள 33 வயதான குருகுலப் பட்டதாரி ஆசிரியைக்கு அரச, தனியார் நிறுவனங்களில் தொழில் புரியும் மணமகன் தேவை. தொடர்பு இல:- 511, மே/பா உதயன் பணிமனை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (42141)

### இலவச திருமண சேவை

உயர் குலபொறியியலாளர், டாக்டர்களுடன் செவ்வாய் குற்றமுள்ள தங்கை ஆசிரியைகளுடன் மாற்றாகவோ, தனியாகவோ முப்பத்தாறு வயதுக்குள் துணைகள் தேவை. பல ஜோடிகள் உண்டு. தொடர்பு நேரில் மட்டும். க. நடராஜா, மே/பா முத்துக்குமாரு செல்லப்பா, புன்னாலைக்கட்டுவன் தெற்கு. (42175)

### விண்ணப்பப் படிவம்

புதிய ஆசிரியர் இடமாற்றப் படிவம் விற்பனையாகின்றது. தபாலில் பெற விரும்புவோர் ரூபா - 6.00 பெறுமதியான முத்திரையும், சுயவிலாசம் இட்ட கடித உறையும் அனுப்பவும். நாயகபாலன் புத்தக களஞ்சியம், மானிப்பாய். (42189)

### விற்பனைக்கு

மண்ணெண்ணெய்க்கு மாற்றாத 6 ஸ்ரீ பேஜோ 404, கார் (Pengeot 404) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 15/14, A சங்கிலியன் வீதி, நல்லூர். (42171)

### ஒலிப் பதிவாளர்

5 வருட முன்அனுபவமுள்ள ஒலிப்பதிவாளர்கள் தேவை. கவர்ச்சிகரமான வேதனம் வழங்கப்படும். சிபார்சுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. விண்ணப்பங்களை: மே/பா, இல:- 512, உதயன் பணிமனை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [சி-2742]

## யா/ தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அபிவிருத்திச் சங்கம் வருடாந்தப் பொதுக் கூட்டம்

யா/ மகாஜனக் கல்லூரி அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் **25-08-96** ஞாயிறு காலை 9-30 மணிக்கு (பழைய நேரம்) கல்லூரி மண்டபத்தில் மருதனார் மடத்தில் நடைபெறும்.

அங்கத்தவர்கள் அனைவரும் சமுகம் தரவும்.

குறிப்பு: கல்லூரி நலன்விரும்பிகள் அங்கத்தினராகச் சேர விரும்புவோர் 18-8-1996 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

(சி-2741) அதிபர் / தலைவர்

## MANI MOTOR TECHNICAL INSTITUTES

**21 - 07 - 96** முதல் **15 - 08 - 96** வரை விண்ணப்பப் படிவங்கள் பெற்றுக் கொள்ளலாம்

**MOTOR MECHANISM**

மோட்டார் சைசிக்கிள், கார், நீர் இறைக்கும் இயந்திரம், உழவு இயந்திரம் போன்ற

FOUR STROKE ENGINES
TWO STROKE ENGINES
ROTARY ENGINES
PETROL ENGINES
DIESEL ENGINES
KEROSENE ENGINES

ஆகிய சகல விதமான இயந்திரங்களும் படிப்பிக்கப்பட்டு செய்முறைகளும் பயிற்றுவிக்கப்படும்.

உரிமையாளர்:
விஸ்வலிங்கம் பாலாமணி

சந்திக்க வேண்டிய முகவரி:
விஸ்வலிங்கம் முகுந்தன்,
உடுப்பிட்டி வீதி,
வதிரி (இரும்பு மதவடி),
கரவெட்டி.

மேலதிக விவரங்களை நேரில் சந்தித்து பெறவும்.
ஆங்கிலமும் கற்பிக்கப்படும்.

(41915)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 12 — 09 — 1912

மறைவு: 24 — 07 — 1995

**அமரர் க. சிவப்பிரகாசம் B.A (LOND.)**

(ஓய்வு பெற்ற அதிபர் விக்னேஸ்வராக்கல்லூரி கரவெட்டி, நடேஸ்வராக் கல்லூரி காங்கேசன்துறை)

திதி: 10-08-1996

பொய்யாமற் பெய்மழையாய்ப் பொருவில்லாத் தரு நிழலாய்
ஐயா! எம் குடியாளும் அரசாக வாழ்ந்து வந்தீர்!
எய்யாமல் நாம்வாழ உவந்தெவையும் செய்து விட்டு
மெய்யான புகழ் நிலவ மேலுலகம் சென்றதென்னே!

பிரிவால் துயருறும்:

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரங்கள்.

வடலிப்பாதி,
தும்பளை,
பருத்தித்துறை.

(சி-2740)

## காணவில்லை

அரியாலை ஏ. வி. றோட்டைச் சேர்ந்த
**திருமதி தையல்நாயகி பாலசுந்தரம்**
(வயது 58)

என்பவர் **20-04-96** அன்று இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் வரும்போது கெற்பெலி (கிளாலி) க்கு அண்மையில் காணாமல் போய்விட்டார். இவர் 5அடி 6அங்குலம் உயரமுடையவர். பொது நிறம். காதில் காதணி மட்டும் அணிந்திருந்தார். இவரைப் பற்றி விவரம் தெரிந்தவர்கள். திருமதி பே. பேரம்பலம் 51. புங்கன்குளம் வீதி, அரியாலை எனும் முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தகவல்:
[42191] திருமதி பேரம்பலம்

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி அதிபர்
திருமதி தே. பாலசிங்கம் அவர்களின் தாயார்
திருமதி
**பரமேஸ்வரி அம்பலவாணர்**

08 – 08 – 96 வியாழக்கிழமை சிவபதமடைந்து விட்டார். அன்னாருக்கு எமது இதயம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உப அதிபர்கள், ஆசிரியர்கள்,
மாணவமாணவியர், ஊழியர்கள்.
யா / கலாநிதி ஆ. தியாகராசா ம. ம. வி.
காரைநகர்.

(42190)



மீண்டும் நெல்லியடியில் இயங்குகின்றது!
செவ்வாய், வியாழன், சனி
காலை 8-30 மணிமுதல் பகல் 12-30 மணிவரை
யாழ் வீதி, நெல்லியடி.
(மகாத்மா தியேட்டர் அருகாமை)

சிறந்த முறையில் பல் கட்டுவதற்கும், மூக்குக் கண்ணாடிகளைப் பெறுவதற்கும் இன்றே நாடுங்கள்:

## லாவண்யா

**பல் மூக்குக் கண்ணாடி அகம்**

நெல்லியடி, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(சி/2728)

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 09 — 10 — 1924

மறைவு: 10 — 08 — 1989

**அமரர் சுப்பிரமணியம் குருநாதன்**
(சட்டத்தரணி)

ஆண்டு பல சென்றாலும் உங்கள் நினைவலைகள் என்றும் எம்மை விட்டு நீங்காது.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்.

13/3, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

(42179)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### ஆபத்து நிலை

கிளிநொச்சி மக்கள் குறித்து வரும் செய்திகள், தகவல்கள் மிகவும் கவலை அளிப்பனவாக உள்ளன.

தொண்டர் நிறுவனங்களின் உத்தேச மதிப்பின்படி வியாழக்கிழமை வரை இரண்டரை லட்சம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

இவர்களில் பெரும் பகுதியினர் எங்கே புகலிடம் தேடி உள்ளனர், இடம் பெயர்ந்து எங்கே தங்கி உள்ளனர் என்பது அரசாங்க அதிகாரிகளுக்கும் தெரியாது; தொண்டர் நிறுவனங்களுக்கும் தெரியாது.

இடம் பெயர்ந்த மக்களில் மிகப் பலரும் காடுகளுக்குள் சிக்குண்டிருப்பர் என்று தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள் அஞ்சுகிறார்கள்.

குடியிருப்புகளோ மனித சஞ்சாரமோ இல்லாத காடுகளில் அகப்பட்டுக் கொண்ட மக்கள் நிலையை எண்ணவே நெஞ்சம் துணுக்குறுகிறது. குழந்தைகள், வயோதிபர்கள், நோயாளர்கள், கர்ப்பிணிகள் என்று நலிந்தவர்கள் காடுகளில் தங்கியிருந்து தமது உயிர்களை எப்படிக் காப்பாற்றப்போகிறார்கள் என்ற ஏக்கம் இங்குள்ள தமிழர்களின் இதயங்களை எல்லாம் வதைக்கிறது.

அந்த ஏக்கத்துக்கு மேலதிகமாக—

பலத்த சண்டைக்கு—அதன்போதான கடும் விமான மற்றும் ஷெல் தாக்குதல்கள் என்பவற்றுக்கு—மத்தியில் தம் உயிரைக் காப்பாற்றிவிட்டால் போதும் என்ற ஒரே நோக்கத்துடன் —

பல நாள்களாக, காடு கரம்பை என்றும் மேடு பள்ளம் என்றும் ஓடியோடி இளைத்துக் களைத்து குடியேற்றக் கிராமங்களுக்கு இடம் பெயர்ந்திருக்கும் மக்களுக்கு —

உணவு உட்பட நிவாரண உதவி எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை என்ற தகவல்கள் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவனவாக உள்ளன.

அரசாங்கம் இது விடயத்தில் உகந்த நடவடிக்கை எடுக்காதிருப்பது மிகவும் கவலைக்குரியது. கண்டிக்கப்பட வேண்டியது.

இது மக்களின் உயிரோடு விளையாடும் ஒவ்வாத செயலாகும். அரசு இது விடயத்தில் காட்டும் ஒவ்வொரு நிமிடத் தாமதமும் பல நூற்றுக் கணக்கான உயிர்களைப் பலி கொள்ளும் கொடுமையாக மாறும். தமிழ் மக்களை வேண்டுமென்றே பட்டினி போட்டுச் சாகடிக்கும் நோக்குடன் அரசு இவ்வாறு நடந்து கொள்கிறது என்ற அவப்பெயரையும் உண்டாக்கும்.

இந்த அவதிக்குரிய வேளையில், கிளிநொச்சியில் இயங்கி வந்த அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் செயற்பாடுகள் சீர்குலைந்திருப்பது மேலும் துரதிர்ஷ்டமானது.

அரசின் நிவாரணப் பணி தாமதமடையும் வேளைகளில் எல்லாம், தமிழ் மக்கள் தொண்டர் நிறுவனங்களையே தமது ஆபத்பாந்தவர்களாகக் கருதுவது உண்டு. அவையும் செயலிழந்து விட்டால், நிவாரணப்பணி நின்று விட்டால் மக்கள் என்ன செய்வர்?

எனவே அரசாங்கமும் அரச சார்பற்ற நிறுவனங்களும் மற்றும் சர்வதேச தொண்டர் நிறுவனங்களும் ஒன்றிணைந்து செயற்பட்டு இடம் பெயர்ந்த மக்களுக்கான நிவாரணப் பணிகளை உடன் ஆரம்பிக்கவேண்டும். இல்லையேல் பெரும் ஆபத்தான நிலை உருவாகும். தாமதம், மனித உயிரிழப்புகளாகி விடும்.

---

ஐ. தே. க. முட்டுக்கட்டை போட்டால்

# ஜனாதிபதி தனது அதிகாரத்தை பயன்படுத்தி தீர்வு காணவேண்டும்

## நாடாளுமன்றில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம். பி.

கொழும்பு ஓக. 10

ஐக்கிய தேசியக் கட்சி தீர்வு யோசனைகளுக்கு ஆதரவு வழங்க முன்வராவிட்டால் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி தனது அதிகாரத்தை பாவித்து இனப் பிரச்சினைக்கு முன்வைத்துள்ள தீர்வை செயற்படுத்த முன்வர வேண்டும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் யாழ். மாவட்ட பிரதிநிதி ஐ. எம். இலியாஸ் கோரிக்கை விடுத்தார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்கும் பிரேரணை மீதான விவாதம் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் நடந்த சமயம் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

### பொருளாதார நெருக்கடி

ஐ. தே. க. மாத்தறை மாவட்ட பிரதிநிதி றொனி டி மெல் விவாதத்தினை அங்கு ஆரம்பித்து வைத்துப் பேசுகையில்:-

நாடு பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. பணவீக்கம் நாட்டில் அதிகரித்து வருகிறது யுத்தத்தின் அழிவுகளினால் மக்கள் பாதிப்படைந்துள்ளனர்.

தமிழ் மக்கள் சந்தேகக் கண் கொண்டு பார்க்கப்படுகின்றனர்.

தொண்டமான் அமைச்சராக இருந்தபோதும் மலையக மக்களும் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு செயற்படவேண்டியது அரசின் கடமை என்றார்.

### அரசுக்குப் பெரும் பின்னடைவு

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுகையில்-

முல்லைத்தீவு யுத்தத்தில் அரசாங்கம் பெரும் பின்னடைவைக் கண்டுள்ளது. இந்தப் பின்னடைவுக்கான காரணம் என்ன என்பதைக் கண்டறிவதற்கு பாதுகாப்பு பிரதி அமைச்சர் இராணுவ நீதிமன்ற விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட உள்ளதாக நேற்று இச்சபையில் கூறினார்.

அத்தகைய விசாரணை மட்டும் உண்மை நிலையைக் கண்டறியப் போவதில்லை. முல்லைத்தீவு நிலைமை பற்றி விசாரணை செய்வதற்கு ஒரு விசேடகுழு அமைக்கப்பட்டு அவர்களும் இதுபற்றி விசாரித்து உண்மை நிலையைக் கண்டறிய அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார்.

### அரசு விரைவில் வீழ்ச்சி அடையும்

வவுனியா மாவட்ட ஐ. தே. க. பிரதிநிதி ராஜமனோகரி புலேந்திரன் பேசுகையில்-

அரசாங்கம் யுத்தத்தை நீடித்துக் கொண்டு செல்வதால், எமது மக்கள் பல துன்பங்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது.

வவுனியாவில் எண்ணற்றவர்கள் கொழும்புக்கு வர அனுமதி கிட்டாமல் அல்லற்படுகின்றனர்.

கனடாவுக்குச் செல்வதற்கு வீஸா அனுமதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வவுனியாவிலிருந்து கொழும்புக்கு வருவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. இந்த அரசாங்கத்தின் வீழ்ச்சி வெகுவிரைவில் வந்துவிடும் எனக் கூறினார்.

யாழ். மாவட்ட சுயேச்சைக் குழு உறுப்பினர் ஏ. நடராஜா பேசுகையில் —

கடந்த அரசாங்கம் பதவியிலிருந்தபோது நடைபெற்ற இனக்கலவரத்தால் எண்ணற்ற தமிழ் மக்கள் உயிரையும் உடைமைகளையும் இழந்து விட்டனர். பதவியிலிருந்த அரசாங்கம் எண்ணியிருந்தால் அக்கலவரத்தை 24 மணித்தியாலத்தில் அடக்கியிருக்கலாம்.

இன்று யாழ். மக்களைக் கொழும்புக்கு வரவிடாமல் தடுப்பது அவர்களை அந்நியப்படுத்துவதாகவே அமையும் என்பதை அரசாங்கம் உணர வேண்டும் என்றார்.

### பாடசாலைகளில் படையினர்

வன்னி மாவட்ட புளொட் கூட்டமைப்பு பிரதிநிதி கே. பாலசந்திரன் பேசுகையில்;

இன்று கிளிநொச்சி பகுதிகளில் முன்கொண்டு செல்லப்படும் யுத்தத்தினால் அந்தப் பகுதியில் வாழும் மக்கள் இடம்பெயர்ந்து அனாதைகளாக உண்ண உணவின்றி குடிப்பதற்கு தண்ணீர் இன்றி தவிக்க நேரிட்டுள்ளது.

வன்னி மாவட்டப் பாடசாலைகளில் 25 பாடசாலைகளை இராணுவம் தனது தேவைக்கு எடுத்துள்ளதால் மாணவர்களின் கல்வியும் பாதிக்கப்பட்டுள்ளது

வவுனியா கல்விக் கல்லூரிக்கு ஏற்படப் போகும் நிலையும் இதுதான். இதனை அமைச்சர் தடுக்க முன்வர வேண்டும்.

கொழும்பில் நடக்கும் குண்டு வைப்புச் சம்பவங்கள் எல்லாவற்றையும் புலிகள் தான் செய்கின்றனர் என்ற முடிவுக்கு அரசாங்கம் இலகுவில் வந்து விடக்கூடாது என்றார்.

கொழும்பு மாவட்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதி ஆர். யோகராஜா உரையாற்றுகையில் —

வடக்கில் உணவுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது.

கப்பல் சேவைகள் மூலம் பொருள்களை கொண்டு செல்வதற்கு தனியார் துறையினர் ஆர்வம் காட்டுகின்றனர். அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு பொருள்களின் தட்டுப்பாட்டை நீக்க அரசு உதவ வேண்டும்.

வடக்கே செல்ல விரும்பும் பிரயாணிகள் பயணத்தை மேற்கொள்வதில் பல சிரமங்கள் இருக்கின்றன. திருகோணமலை கப்பல் சேவை மட்டும் போதுமானதாக முடியாது.

வடக்கே இருந்து கொழும்பு வருவதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் மிகவும் சிக்கலானவை இவை தளர்த்தப்பட வேண்டும்.

விசாரணை இன்றி பல இளைஞர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் குற்றமற்றவர்களாயின் விடுதலை செய்யப்பட வேண்டும்.

சட்டமா அதிபர் பிரிவில் இதற்கென தனியான விசாரணைப் பிரிவொன்று அமைக்கப்பட்டு விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டு குற்றமற்றவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்றார்.

---

# ஆயுதப் படையினரின் அலவன்ஸ் அதிகரிப்பு

வடக்கு-கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள் இடம்பெறும் பகுதிகளில் பணியாற்றும் ஆயுதப் படை உறுப்பினர்கள் மற்றும் பொலீசாருக்கு வழங்கப்படும் விசேட அலவன்ஸுகள் அதிகரிக்கப்பட உள்ளன.

ஆயுதப்படைகளின் தலைவர் என்ற வகையில் இவற்றை அதிகரிப்பது என்று ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதி விடுத்துள்ள பணிப்புரை ஒன்றின் மூலம், ஆயுதப்படை உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் மாதாந்தம் 3 ஆயிரம் ரூபா வரையிலான அலவன்ஸைப் பெறுவர்.

ஆயுதப்படைகளில் பணியாற்றும் ஏனைய தரத்தினருக்கும் இந்த அலவன்ஸ் 2ஆயிரத்து 500 ரூபாவாக இருக்கும்.

பொலீஸ் அதிகாரிகளும் தொடர்ந்து அவர்களின் விசேட ஒன்றிணைக்கப்பட்ட அலவன்ஸ்களைப் பெறுவர்.

ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்திருக்கும் சம்பள உயர்வு அடுத்த வருடம் அமுல் செய்யப்படும் வரை இந்த அலவன்ஸுகள் தற்காலிகமாக வழங்கப்படும்.

இந்த மாத முதலாம் திகதியில் இருந்து இந்த அதிகரிப்பு வழங்கப்படுகிறது.

---

# 60 வயதுக்கு மேல் சேவை நீடிப்பு இல்லை

## அரசாங்க ஊழியர்களுக்கு

கொழும்பு, ஓக. 10

விசேட காரணங்கள் ஏதும் இருந்தாலன்றி அரச ஊழியர்களை 60 வயதுக்கு மேல் பணியாற்ற அனுமதிக்க வேண்டாம் என்று ஜனாதிபதி சகல அமைச்சுக்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

ஏற்கனவே அமைச்சரவை மட்டத்தில் இந்தத் தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

60 வயதுக்குப் பின்னர் சேவை நீடிப்புக் கோரி சில உத்தியோகத்தர்கள் சட்ட நடவடிக்கை எடுத்திருப்பதால் ஜனாதிபதி மீண்டும் இது குறித்து பணிப்புரை வழங்க வேண்டி ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த கொள்கைக்கு அமையவே சட்டமா அதிபர் திணைக்களமும் அரசாங்க அமைப்புக்களுக்கு ஆலோசனை வழங்க வேண்டும் என்றும் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். (இ-3)

---

## வாசகர் திருமுகம்

### மலியும் திருட்டுகள்

05 – 08 – 96 உதயன் ஆசிரியர் தலையங்கம் படித்தேன். நாட்டில் மக்கள் சிலரிடையே திருட்டு ஒரு கைதேர்ந்த கலையாகி வருவதையும் அது கண்டிக்கப்படவேண்டும் என்பதையும் எடுத்துக் காட்டியது அத்தலையங்கம்.

அடுத்தவன் வீட்டுச் சொத்தெல்லாம் தன்சொத்து என்று சூறையாடும் மனோபாவம் சமீபகாலமாகத் தலைவிரித்தாடுகின்றது.

அதுவும் ராணுவக் கட்டுப்பாடில்லாத பகுதிகளில் திருட்டு கொள்ளை தினம் தினம் நடக்கின்றன. இத்தகைய சமூக விரோதச் செயல்களைத் தட்டிக் கேட்க எவரும் முன்வராரென்ற எண்ணத்தில் பகல் கொள்ளைகூட நடக்கின்றது. கொள்ளைகளைக் காண்பவர்களும் எமக்கேன் இந்த வம்பு! என்று வாளாவிருந்து விடுகிறார்கள்.

ஆனைக்கோட்டைப் பகுதியில் சமீபகாலமாக சகல வகைத் திருட்டுகளும் தினமும் நடக்கின்றன. இப்பகுதியில் மக்கள் பயத்துடனேயே வாழ வேண்டியுள்ளது. சில தினங்களுக்கு முன்னர் ஆள்கள் இருந்த வீட்டில் இரவு மாடொன்று களவாடப்பட்டு இரவோடிரவாக இறைச்சியாக்கப்பட்டது. வீட்டார் விரைந்து செயற்பட்டதன் காரணமாக மாட்டிறைச்சி விற்கும் கடைக்காரர் வகையாக மாட்டிக் கொண்டார்.

ஆனைக்கோட்டைச் சந்திக்குப் பக்கத்தில் ஒரு வீடு பட்டப்பகலில் தீவைக்கப்பட்டது. ஆள்களில்லாத வீடு தீவைக்கப்பட்டதன் காரணம் எவருக்கும் புரியாத புதிராக இருக்கின்றது!

இன்னொரு வீடு, ஷெல் பட்டு ஏற்கனவே உடைந்த வீடு. கதவுகள் பூட்டப்பட்டிருக்க யன்னல்கள் பெயர்த்துக் கீழே போடப்பட்டுள்ளன. மற்றொரு வீட்டில் உள்ள தகரங்கள் களவாடப்பட்டு வீட்டு ஓடுகள் மாயமாக மறைந்துள்ளன. களவாடப்பட்ட இந்த 2 வீடுகளுக்கும் அருகில் மக்கள் குடியிருக்கிறார்கள். அப்படியிருந்தும் கள்ளர் தம்கைவரிசையைக் காட்டத் தவறவில்லை.

உடைமைகளை இழந்து உயிருக்காக அங்கும் இங்குமென்று ஓடிக்கொண்டிருக்கும் வன்னிப் பிரதேசத்திலுள்ள மக்களின் இங்குள்ள வீடுகள் முற்றுமுழுதாகச் சூறையாடப்பட்டு வருகின்றன.

அயலிலுள்ள மக்கள் விழிப்பாயிருந்து திருடர்களைக் கண்காணிக்க முன்வராத வரை இப்படியான திருட்டுக்களைத் தடுத்து நிறுத்துவது சுலபமான தொன்றல்ல.

துன்பமுற வரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை

ந. சிவபாதம்

ஆனைக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி சந்திரிகா அறிவிப்பு:

# அரசாங்க ஊழியருக்கு ஜனவரி சம்பள உயர்வு!

## 2 மாதத்தில் 20,000 இளைஞருக்கு வேலைவாய்ப்பு

அனைத்து அரச ஊழியர்களுக்கும், பாதுகாப்பு படையினருக்கும் பொலீஸாருக்கும் அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதியில் இருந்து சம்பள உயர்வு வழங்குவதென அரசு முடிவு செய்துள்ளது; அவர்களுக்கு ஏனைய எல்லா வசதிகளும் வழங்கப்படும்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

இரத்தினபுரி புதிய நகரமை தானத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே இந்த அறிவிப்பை அவர் விடுத்தார். அவர் மேலும் கூறியதாவது:-

இந்த சம்பள உயர்வு தனியார் துறையினருக்கும் கிடைக்கச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

பல்வேறு தடைகளுக்கு மத்தியிலும் மக்கள் வாழ்க்கைச் செலவை சமாளிக்கக் கூடிய வகையில் சம்பளத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சம்பள உயர்வு பற்றி ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய இந்த அதிகரிப்பு வழங்கப்படுகிறது.

பல்கலைக் கழகங்களில் இருந்து வெளியேறிய வர்களும், ஜி. சீ. ஈ (உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்தவர்களுமான இருபதாயிரம் பேருக்கு இன்னும் 2 மாதங்களுக்குள் வேலை வாய்ப்பு வழங்கப்படும்.

அரசாங்கம் அதன் பதவிக் காலம் பூர்த்தியாக முன்னர் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றும்.—என்றார். (உ-3)

### கரடிப்போக்கு ..

1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது விமானப்படை விமானங்கள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றன என்றும் —

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் மேலும் அறிவித்தது.

(உ- 3-5-10)

### சர்வதேச...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னங்கள் அரசின் கட்டுப்பாடின்றி சுதந்திரமாக தமது நிவாரணப் பணிகளை மேற்கொள்வதை உறுதிப்படுத்தவும் —

ஸ்ரீலங்கா அரசின்மீது சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் புலிகள் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் —

இராணுவக் கட்டுப்பாட்டில இல்லாத வன்னிப்பகுதிக்கு உணவுப்பொருள்களை ஏற்றி வருவதற்காகதாண்டிக்குளம் பகுதிக்குச் சென்ற லொறிகளின் சாரதிகள் மற்றும் உதவியாளர்கள் அப்பகுதியில் தாக்கப்பட்டிருப்பதாக மற்றொரு செய்தி தெரிவித்தது. (உ-3-5-10)

### முல்லைத்தீவு ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாலுமி ஒருவர் காயமுற்றதாகவும் அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் —

கடற் புலிகளின் தாக்குதல்களினால் கடந்த மாதம் 19 ஆம் திகதி முல்லைத்தீவுக் கடலில் அழிக்கப்பட்ட ''ரணவிரு'' கப்பலின் பாகங்களைக் கழற்றி எடுத்துச் செல்லும் நோக்குடன் வந்த கடற் புலிகளின் படகு ஒன்றை கடந்த செவ்வாயன்று கடற் படையினர் தாக்கி அழித்ததாக கடற்படைச் செய்தி வட்டாரங்களை மேற்கோள் காட்டி யாழ்ப்பாண வானொலி தெரிவித்தது. (உ)

### 6 தமிழ்க்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாடுகளைத் தீர்த்து வைப்பதற்கு பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் என்று கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டது என்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தெரிவித்தது. (இ-3)


உ

சாவகச்சேரி

## அருள்மிகு ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்

அன்புடையீர்;

மேற்படி தேவஸ்தானத்தில் சித்திரத்தேர் **12-8-96** திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற அம்பாள் திருவருள் கூட்டி உள்ளார்.

அனைவரும் வருக அன்னை அருள் பெறுக.
சிறப்புடன் நடைபெற அம்பாளை வேண்டுகிறோம்.

P. S. பத்மநாதன் குடும்பம்
(நோர்வே)
R. மகாஜெயம் குடும்பம்
(டென்மார்க்)

''குறுமுனி அம்மன்''
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

[42091]



## 31- ம் நாள் நினைவஞ்சலி

### திருமதி ஜெயக்குமார் சிற்ரேஸ்வரி

(யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்)

புன்னகை பூத்த புதுமலராய்
ஒன்பது வருடங்கள் எங்களுடன்
கூடிக் குலாவிய நண்பியே
ஆண்டொன்றுக்குள் அன்புத்துணைவனையே
தவிக்க விட்டுச் சென்றாயே
நேசக்கரம் நீட்டி நோயாளர் துன்பம் தீர்த்த நீ
உன் நோய் தீர்க்காது விண்ணுலகம் சென்றதேனோ?

உன்பிரிவால் வாடும்:

உன்னருமைத் தோழிகள் அறுவர்,
யாழ். போதனா வைத்தியசாலை.

தகவல் — M. முருகதாஸ். (42183)


## தாக்குதலில் மரணம்

தென்மராட்சி, ஓக 10

மந்துவில் வடக்கைச் சேர்ந்த இளைப்பாறிய பஸ் சாரதியான எஸ். பொன்னுத்துரை (வயது 60) என்பவர் தாக்குதலுக்கு உள்ளாகி மரணமானார். இவரது உறவினர் ஒருவரே இவரைத் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

நேற்று முன்தினம் இரவு இவர் தாக்கப்பட்ட போதிலும் ஆஸ்பத்திரிக்குக்கொண்டுவர வாகன வசதி கிடைக்காததால் நேற்றுக் காலையே ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டார். எனினும் சில நிமிடங்களில் உயிர் பிரிந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-117)

### பிலிப்பீன்ஸ் ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றது.

தாக்குதலுக்குள்ளான சமயம் மூவாயிரம் தொன் இல்மனைட் கனிப்பொருள் அடங்கிய மண் கப்பலில் ஏற்றப்பட்டிருந்தது.

மூன்று தடவைகள் றொக்கட் தாக்குதலுக்கு இக்கப்பல் இலக்கானதை அடுத்து கப்பலுக்குள் நீர் புகுந்திருப்பதாக அறிவிக்கப்படுகின்றது என இலங்கை வானொலி நேற்று மதியம் அறிவித்தது.

ஆனால் கடலுக்குக்கீழாகச் சென்று இக்கப்பலைத் தகர்க்க புலிகள் முயற்சித்துள்ளனர் என்றும்—

கப்பலைப் பழுது பார்க்கும் முயற்சியில் தற்போது கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர் என்றும்—

இலங்கை வானொலி நேற்று மாலை அறிவித்தது.

தாக்குதல் நடந்த சமயம் கப்பலில் இல்மனைட் ஏற்றும் பணியில் ஈடுபட்டிருந்த ஒன்பது உள்ளூர் தொழிலாளர்கள் இச்சம்பவத்தில் காயமடைந்தனர் என்றும்—

அவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என்றும்—

கப்பலில் பணிபுரிந்த 22 பிலிப்பீன்ஸ் நாட்டு மாலுமிகள் மற்றும் சிப்பந்திகள் காயமின்றித் தப்பிக் கொண்டனர் என்றும்—

மேலும் அறிவிக்கப்பட்டது.

(உ-3-5-10)

## யாழ். ஆஸ்பத்திரியிலிருந்து மாறி எடுத்துச்செல்லப்பட்ட பெண்ணின் சடலம்...!

யாழ்ப்பாணம், ஓக. 10

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இறந்த பெண் ஒருவரின் சடலம், உறவினர்களால் மாறி எடுத்துச் செல்லப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றது

எனினும் தவறு கண்டுபிடிக்கப்பட்டு, வெளியே எடுத்துச் செல்லப்பட்ட சடலம் சுமார் இருபது நிமிட நேரத்தின் பின்னர் திருப்பிக் கொண்டுவரப்பட்டது.

சம்பவம் குறித்து அறிய வருவதாவது:-

வெவ்வேறு இரண்டு வார்டுகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்ற இரு பெண்கள் நேற்று முன்தினம் அதிகாலை காலமானார்கள். அவர்களில் ஒருவரின் சடலம் பிரேத அறைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. மற்றச் சடலம் வார்டிலேயே இருந்தது.

வார்ட்டில் இருந்த சடலத்துக்கு உரியவர்களின் உறவினரில் சிலர், அதனை வார்ட்டில் இருந்து எடுத்துச் செல்வதற்கான அனுமதி கிடைத்ததும்—

சடலம் பிரேத அறைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக அனுமானித்து, அங்கிருந்த மற்றப்பெண்ணின் சடலத்தை அவசரத்தில் எடுத்துச் சென்றனர்!

ஏனைய உறவினர்களை வார்ட்டிலிருந்து கூட்டிச் செல்வதற்காக, அங்கு போன போது சம்பந்தப்பட்டவரின் சடலம் அங்கிருந்து பிரேத அறைக்கு எடுத்துச் செல்லப்படவில்லை என்பதனை அறிந்தனர்.

உடன் செயற்பட்டு அடுத்த பெண்ணின் சடலத்தை எடுத்துச் சென்ற வாகனத்தைப் பின்தொடர்ந்து, வழியில் மறித்து அதனை ஆஸ்பத்திரி பிரேத அறைக்குக்கொண்டுவந்து சேர்த்தனர்.

அதன் பின்னர் அங்கு காத்து நின்று. தமது உறவினர்கள் சடலம் கொண்டு வரப்பட்டதும் எடுத்துச் சென்றனர்.

உறவினர்களின் அவசரமும், ஊழியர்களின் கவனமின்மையுமே இச்சம்பவத்துக்குக் காரணம் என்று பலரும் பேசிக் கொண்டனர். (அ-15)

## தனியார் மயமாக்கப்பட்ட சில அரச நிறுவனங்கள்

### அரசு மீண்டும் பொறுப்பேற்கும்

கொழும்பு, ஓக. 10

தனியார் மயமாக்கப்பட்ட அரசாங்க நிறுவனங்கள் சிலவற்றை மீண்டும் அரசாங்கம் பொறுப்பேற்பதற்கு வகை செய்வதற்கான சட்டமூலம் ஒன்றை நாடாளுமன்றத்தில் கொண்டுவரப் போவதாக நீதி, அரசமைப்பு விவகார அமைச்சரும், நிதிதிட்டமிடல் பிரதி அமைச்சருமான பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தனியார் மயப்படுத்தப்பட்ட சிலஅரசாங்க நிறுவனங்கள் அவற்றுக்கு விதிக்கப்பட்ட குறிப்பிட்ட சில பிரமாணங்களைப் பூர்த்திசெய்யத் தவறியதாலேயே இத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ள அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது என்று பேராசிரியர் பீரிஸ் தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிப்பதற்கான வாராந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதைத் தெரிவித்தார்.

தனியார் மயமாக்கலுக்கான உண்மையான நோக்கத்தைப் பூர்த்தி செய்யாத நிறுவனங்கள் —

மற்றும் தனியார் மயமாக்கப்பட்டபின்னர் ஊழியர்களுக்கு ஒழுங்காகச் சம்பளக் கொடுப்பனவுகளைச் செய்யாத நிறுவனங்கள் —

அரசினால் மீளப் பொறுப்பேற்கப்படும். (இ-3)

### முன்பிணை —.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது.

முன்பிணை அனுமதி கோரி செல்வி ஜெயலலிதா நேற்றுத் தாக்கல் செய்த மனு மீதான விசாரணை எதிர்வரும் 14ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று நீதிபதி திரு. சிவப்பா தெரிவித்தார்.

ஜெயலலிதாவின் மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன் (அதாவது 14 ஆம் திகதிக்கு முன்) அவரைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என்று தமிழக அரசு சார்பாக ஆஜரான வழக்கறிஞர் ஆர். சண்முகசுந்தரம் உறுதி அளித்துள்ளார்.

இதற்கிடையில் செல்வி ஜெயலலிதா 3 லட்சம் அமெரிக்க டொலரை நன்கொடையாகப் பெற்றிருப்பது தொடர்பாக புலனாய்வுப் பிரிவு விசாரணை நடத்த மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்ததாக முதலமைச்சர் மு. கருணாநிதி நேற்றுச் சட்டசபையில் தெரிவித்தார்.

முன்னாள் முதலமைச்சரிடம் சி. பி. ஐ. விசாரணை நடத்தவிருப்பதாக வந்த செய்திகளை தமிழ் மாநில காங்கிரஸ் உறுப்பினர் சொக்கர் நேற்றுப் பேரவையில் அரசின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

இதற்குப் பதில் அளித்த முதலமைச்சர், அமெரிக்காவில் இருந்து 3லட்சம் டொலர் அதாவது சுமார் ஒரு கோடி ரூபாவும், உள்நாட்டில் இருந்து 3 கோடி ரூபாவும் நன்கொடையாகப் பெற்றிருப்பது குறித்து ஜெயலலிதா மீது நடவடிக்கை எடுக்க வருமானவரித்துறை மாநில அரசைக் கேட்டுக்கொண்டதாகக் கூறினார்.

(இ-3)

### பலவீன..,

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

★ முல்லைத்தீவில் மிகப் பெரிய வெற்றி ஒன்றை அண்மையில்தான் புலிகள் சம்பாதித்துள்ளனர். இந்த நிலையில் புலிகள் பலவீனமுற்றுள்ளார்கள் என்றோ அதன் காரணமாகவே சர்வதேச தலையீட்டைக் கோருகின்றார்கள் என்றோ கூறுவது தவறானதாகும்.

★ கிளிநொச்சியிலிருந்து இடம்பெயர்ந்து உணவு, மருந்துப் பொருள்களின்றி அவதியுறும் தமிழ் மக்களின் நிலை மோசம்.

★ உணவு, மருந்துப் பொருள்களை ஓர் இராணுவக் கருவியாக அரசு பயன்படுத்துகின்ற சூழ்நிலையும், அதை சர்வதேச சமூகம் பார்த்துக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையும் உள்ளன.

★ சர்வதேச உதவி நிறுவனங்கள் அரசின் அனுமதியின்றிச் செயற்பட முடியாத நிலையில் உள்ளன. சுதந்திரமாக அவை செயற்பட முடியாத நிலையும் உள்ளது.

[உ-3]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 10-08-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org